Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
(C/349)
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 16 ஞாயிற்றுக்கிழமை (30.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 122

### உள்ளூராட்சித் தேர்தல் களத்தில்

## ஆனந்தசங்கரியின் காலை பற்றிப் பிடிக்கும் கூட்டமைப்பு




(யாழ்ப்பாணம்)

மூத்த தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவரான வீ. ஆனந்தசங்கரியின் தலைமையில் இருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் சரண் அடைந்து உள்ளது தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகள் உள்ளன. பூநகரி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி ஆகிய பிரதேசசபைகளே அவை. ஆயினும் பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேசசபை (12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வேட்பு மனுக்கள் இன்று செயலகத்துக்கு



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு என தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களையும் தேர்தல்கள் செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அனைத்து தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்று குறித்த வேட்பு மனுக்களை தேர்தல்கள் செயலகத்தில் கையளிக்குமாறு அறிவுறுத்தியுள்ள தயானந்த திஸநாயக்க, வேட்பாளர்களுடைய போட்டி இலக்கம் வர்த்தமானி ஊடாகப் பிரசுரிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.அனைத்து வேட்பு மனுக்களையும் பரிசீலித்ததன் பின்னர் அடுத்த வாரம் (11ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.வடமராட்சி கிழக்குப் பகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் மரணம்

(பருத்தித்துறை)

**வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான ஈழமக்கள் ஜனநாயகக் கட் சியின் பிரதேச் அமைப்பாளராக இரத்தினசிங்கம் சதீஸ் நேற்றுக் காலை மரணமடைந்துள்ளார். பருத்தித்துறையில் உள்ள ஆனைவிழுந்தான் சந்திக்கும் வல்லிபுரக் கோயிலுக்கும் இடைப்பட்ட பிரதான வீதியிலிருந்து மரணமடைந்த இவரது சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.**



தலையில் பலத்த காயமடைந்து இரத்த வெள்ளத்தில் இவரது சடலம் அப்பகுதியில் காணப்பட்டது. நேற்றுக்காலை மேற்படி வீதி வழியாக அம்பன் என்ற பகுதியை நோக்கி இவர் பயணித்துக்கொண்டிருந்த சமயம் இவருக்கு மரணம் சம்பவித்தி (11ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மாலை இறுதிக்கிரியை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் நேற்று மரணமடைந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கிழக்குப் பகுதி அமைப்பாளர் இரத்தினசிங்கம் சதீஸ் என்பவரது இறுதிச்சடங்குகள் இன்று மாலை இடம்பெறவுள்ளன.

(11ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறைச் சம்பவம் மேலதிக விசாரணைகள் தேவை

### அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியின் ஈ.பி.டி.பி. அமைப்பாளரின் மரணம் தொடர்பாகவும், மரணத்துக்குக் காரணமான சம்பவம் தொடர்பாகவும் மேலதிக விசாரணைகளை விரிவான முறையில் நடாத்தப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கும், தடயவியல் நிபுணர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நேற்றைய சம்பவமும், இச் சம்பவம் குறித்து வெளிவருகின்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## உயர்பாதுகாப்பு வலயங்களாக இருக்கும் மக்களின் வாழ்விடங்கள்

### தனது கவலையை வெளியிடுகிறது ஐ.நா.


(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பேரில் மக்கள் வாழ்விடங்கள் தொடர்ந்தும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளமை குறித்த தனது கவலையை ஐ.நா. வெளியிட்டுள்ளது.

கிழக்கில், இடம்பெயர்ந்து வாழும் மக்களில் சிலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் தவித்து வருகின்றனர். உயர் பாதுகாப்பு (11ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் துயரம் தமிழ்மக்களின் கதி

### அல்ஜசீரா அள்ளிவீசும் அனுதாபம்





(கொழும்பு)

புலிகள் தோற்கடிக்கப்பட்டதோடு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும் என இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்த போதிலும், தமிழ் மக்களின் துயரம் தொடர்ந்து கொண்டே இருப்பதாக அல் ஜசீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

புலிகளுடனான போர் முடிவடைந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் தமிழ் மக்கள் இப்போரில் பறிகொடுத்த தமது உறவுகளை இன்னமும் தேடிக் கொண்டிருப்பதாக இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அல் ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட முழுமையான செய்தியை இங்கே தொகுத்துத் தருகின்றோம். (11ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கான அதிகாரப் பகிர்வை சிங்கள மக்கள் விரும்பவில்லை!

### அமைச்சர் ராஜித சேனாரட்ன சாட்சியம்



(கொழும்பு)

தமிழ்மக்கள் கோரும் அதிகாரப் பகிர்வை வழங்க எந்தவொரு சிங்கள மக்களும் விரும்பவில்லை என உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த மீன்பிடி மற்றும் நீரியல்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

உண்மைகளைக் கண்டறிவ தற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் முதற் தடவையாக சாட்சியமளிக்க வந் திருப்பதாகக் குறிப்பிட்ட அவர், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஓர் அமைச்சராக சாட்சியம ளிக்கத் தான் வரவில்லை எனவும், சாதாரண பொது மகனாகவே தனது சாட்சியத்தை முன் வைப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு குறித்து ஆரம்பத்தில் என் மனதில் சந்தேகம் (11ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கில் இயற்கை அனர்த்தம்; 5 லட்சம் மக்களுக்கு உணவுப் பற்றாக்குறை

## ஐ.நாடுகளின் மனிதாபிமான அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 5 லட்சம் மக்கள் பெரும் உணவுப் பொருள் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருப்பதாக உல்க உணவுத் திட்டம் மதிப்பிட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் காரணமாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஆயிரத்து 341 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மதிப்பிட்டுள்ளது எனவும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசாங்கம் இதுவரை குறிப்பிடத்தக்க நிரந்தர வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தவில்லை எனவும் இணைப்பு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வெள்ளத்தினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், இந்த மாவட்டங்களில் 101, 171 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த நெற் பயிர்கள் அழிவடைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புலிகளுக்கு போலி கடவுச்சீட்டு; பாக்.பிரஜை ஸ்பெயினில் கைது

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு போலிக் கடவுச் சீட்டுக்களை விநியோகித்து வந்தார் என்கிற குற்றச்சாட்டில் பாகிஸ்தான் பிரஜை ஒருவரை ஸ்பெயின் நாட்டு பொலிஸார் கைது செய்து உள்ளார்கள்.

கைதானவரின் பெயர் Malik Sarwar. 1981 ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் பாக். தீவிரவாத அமைப்புகளுக்கும் போலிக் கடவுச் சீட்டுக்களை விநியோகித்து வந்து இருக்கின்றார் என்றும் கடந்த டிசம்பர் மாதம் ஸ்பெயினின் கம்பாய் நகரத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கம்பாய் குண்டுவெடிப்பை அடுத்து இவர் தலைமறைவாகி இருந்தார். ஸ்பெயின் நாட்டு நீதிமன்றம் ஒன்று இவரை கைது செய்ய பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது.

# சட்டவிரோத தேர்தல் பிரச்சார அலுவலகம்; உடன் அகற்ற பொலிஸாருக்கு உத்தரவு

(கொழும்பு)

சட்டவிரோத தேர்தல் பிரசார அலுவலகங்கள் அனைத்தையும் அகற்றுமாறு பொலிஸாருக்கு தேர்தல் திணைக்களம் நேற்று சனிக்கிழமை அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களின் பிரசார நடவடிக்கைகளுக்காக ஒரு அலுவலகத்தை மாத்திரமே வைத்திருக்க முடியும் எனவும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# அறுவடை ஆரம்பம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்தில் பெரும் போக நெற்செய்கை அறுவடைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

நெற்கதிர்கள் முற்றி உலர்ந்து அறுவடைக்கு தயார் நிலையில் காணப்படுவதையடுத்து, வலிகாமம் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் நெல் அறுவடை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

வலிகாமம் மற்றும் தென்மராட்சி போன்ற பகுதிகளில் தாழ் நிலப் பகுதிகளில் அமைந்துள்ள நெல் வயல்களில் நீர் தேங்கி நிற்பதனால் வெட்டியெடுக்கப்படும் நெற்கதிர்களை உலர்த்துவதற்காக வரப்புகளிலேயே அடுக்கிவைக்கப்படும் நிலை காணப்படுவதையும் காணமுடிகின்றது. (03)

# தேர்தல் களத்தில் ஊடகவியலாளர்கள்

(வவுனியா)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் தலா 2 ஊடகவியலாளர்கள் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் வவுனியா தெற்கு சிங்கள தெரிவு பிரதேச சபைக்கு ஒரே சுயேட்சைக்குழு அணியில் 2 ஊடகவியலாளர்களும், மன்னார் நகர சபைக்கு ஒரு ஊடகவியலாளரும் தனித்தனியாக 2 அரசியல் கட்சிகளில் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்று பி.ப 2 மணியளவில் சாவகச்சேரி டச் வீதி அகிலாண்டம் சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. மாலினி தங்கராசாவும், கௌரவ விருந்தினராக யாழ். கூட்டுறவு அலுவலக உத்தியோகத்தர் பி.எம்.மொகமட் நஸ்றினும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகர் ஜே/300 கிராம அலுவலர் வி.சிவசரணநாதனும், சாவகச்சேரி ஜே/300 ஓய்வுபெற்ற கிராம அலுவலர் வை.இராசரத்தினமும், சாவகச்சேரி நகர் சமுர்த்தி உத்தியோகத்தர் ச.செந்தூரனும் கலந்துகொள்வார்கள்.

கூட்ட நிறைவில் நடனம், நாடகம், பட்டிமன்றம் போன்ற கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

# பணிப் புறக்கணிப்பால் பயணிகள் சிரமம்

நீர்கொழும்பு. மற்றும் தோப்புவ சந்திக்கிடையேயான வீதியில் நேற்றையதினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டே இந்தச் சேவைப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகிறது.

புத்தளம் பேருந்து சேவையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இந்தத் தாக்குதல் காரணமாக காயமடைந்த நிலையில் நான்கு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

# வவுனியா ரயில் நிலைய வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையத்தில் திருட்டு

(வவுனியா)

வவுனியா ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள குடிவகைகளை விற்பனை செய்யும் கடையொன்றில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் அமைந்துள்ள இக்குடிவகை விற்பனை செய்யும் கடையில் உள்நாட்டு-வெளிநாட்டுக் குடிவகைகளே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மேற்படி கடையின் பின்பக்கக் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள், விற்பனை செய்த பணம் மற்றும் வெளிநாட்டுக் குடிவகைகள் உட்பட 3 இலட்சம் ரூபா பெறுதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை கடை முகாமையாளர் மற்றும் பணியாளர்கள் கடையைத் திறந்தபோது பொருட்கள் சிதறிக் காணப்பட்டதுடன், பின்பக்கக் கதவும் உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும், பொருட்கள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து குறித்த கடை முகாமையாளர் இது தொடர்பாக வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (39)

# சேதமடைந்த மதகு திருத்தம்

(கொக்குவில்)

யாழ். நகர மையப்பகுதியில் பலமாத காலமாக சேதமடைந்து போயிருந்த பிரதான மதகு இப்பொழுது திருத்த வேலைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மணிக்கூட்டுக் கோபுர வீதியில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதியில் மதகு சேதமடைந்து இருந்ததால் அப்பகுதியில் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன.

யாழ். பிரதான வீதியில் பொதுநூலக நகரை அடையும் பேருந்துகள் வேம்படி வீதி, முற்றவெளிப் பகுதிகளால் நகருக்குள் நுழையும் வாகனங்கள் இம்மதகு ஊடாகவே செல்ல வேண்டும்.

ஆயினும் போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டு மதகின் பழுதடையாமல் இருந்த மற்றொரு பகுதியால் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.(68)

# அநுராதபுரம் சிறையிலிருந்து இரு கைதிகள் தப்பியோட்டம்

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து இரு கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வீ.ஆர்.டீ.சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்களைக் கைது செய்ய விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கத்திக் குத்து; மாணவர்கள் காயம்

றுகுணு பல்லைக்கழக மாணவர்கள் இருவர் கத்தியால் குத்தப்பட்டு மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை பல்கலைக்கழத்திற்கு அருகிலுள்ள பஸ் நிலையமொன்றில் வைத்து இனந்தெரியாத குழுவொன்றுடன் ஏற்பட்ட மோதலின் பின்னர் இம்மாணவர்கள் இருவரும் பல தடவை கத்தியால் குத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுழிபுரம் மத்தியில் 5 பரப்பு காணியுடன் பெரிய வீடு எல்லா வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. மற்றும் பார்மஸி லைட் போட் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0773301041 (R/016)

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். (Computer Repair) அழையுங்கள் 077 1329513 (C/200)


# ஊடகவியலாளர் எக்னெலிகொட ஏன் கடத்தப்பட்டார்? மனைவி விளக்கம்

(கொழும்பு)

பேரழிவை ஏற்படுத்தக்கூடிய இரசாயன ஆயுதங்களை அரசு வட மாகாண தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தியதை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தமையாலேயே ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொட பிரதானமாக கடத்தப்பட்டு உள்ளார் என்று இவரின் மனைவி தெரிவித்துள்ளார்.




வட மாகாண தமிழர்களுக்கு எதிராக அரசினால் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை குறித்து எக்னெலிகொட புலனாய்வு நடத்தினார் என்றும் கண்டுபிடித்த உண்மைகளை பத்திரிகையில் பிரசுரித்து வந்தார் என்றும் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளுக்கு இந்த இரசாயன ஆயுதங்களின் பாவனை குறித்து வெளிப்படுத்தினார் என்றும் கூறினார்.

வட மாகாண தமிழர்களுக்கு எதிராக அரசு இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி உள்ளது என கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளுக்கு எக்னெலிகொட எழுத்துமூலம் 2008 ஆம் ஆண்டு தெரிவித்தார் என்றும் குறிப்பிட்டார்.

எக்னெலிகொட கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவைப் பெரிதும் ஆதரித்தமையாலும் கணவர் கடத்தப்பட்டிருக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

நம்மையே நாம் தெரிந்து கொள்ளாவிட்டால் வெளி உலகத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. நம்மைத் தெரிந்து கொண்டபிறகு வெளி உலகத்தில் தெரிந்து கொள்ள வேறு ஒன்றும் கிடையாது

-ரமணமகரிஷி-


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU



இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com


## 'மரணம்' தண்டனை அல்ல!

இலங்கைக்கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்களை சுட்டுக்கொலை செய்வதாக செய்திகள் வெளிவந்தவண்ணமுள்ளன.

இக்கொலைச் சம்பவங்களினால் இலங்கை-இந்திய நல்லுறவு வெகுவாகப் பாதிக்குமென்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள், ஒரு தரப்பினர் மீது குற்றம் சுமத்துவதும், மறுதரப்பினர் குற்றச்சாட்டுக்களை மறுப்பதும் சம்பிரதாயமாக மாறிவிட்டது.

உள்நாட்டு யுத்தம் நடைபெற்றபோது இந்திய மீனவர்கள் இலங்கைக்கடற்படையினரால் சுடப்பட்டும் கைதிகளாகவும் பிடிப்பட்டு இருந்தனர்.

ஆனால், இப்பொது யுத்தம் முடிவுக்கு வந்தபின்பும் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்றால் அதில் சுந்தேகப்படக் கூடிய அனுமானங்களும் இருக்கத்தான் செய்கிறன.

இந்திய மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவது குறித்து 2008 ஆம் ஆண்டு இலங்கை அரசும் இந்திய அரசும் பேச்சு நடத்தி சில முக்கியமான முடிவுகளை எடுத்திருந்தன.

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டும் இலங்கை-இந்திய மீனவர்கள் இவ் விவகாரம் தொடர்பாக கடுமையான நடைமுறைகளை கடைப்பிடிப்பது இல்லை என்றும், அப்படி சர்வதேச கடல் எல்லையைத் தாண்டினாலும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்கரையை அண்மித்த பகுதிகளுக்குச் செல்லக்கூடாது என்றும், அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில்லை எனவும் இருதரப்பினரும் இணங்கியிருந்தனர்.

இந்த இணக்கப்பாட்டை இந்திய மீனவர்களுக்கு சம்பந்தப்பட்டவர்கள் விளக்கிக் கூறியிருக்கவேண்டும். இதனை அவர்கள் விளக்கிக் கூறத் தவறிய பட்சத்திலேயே போதிய விளக்கமின்றி இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூடுகளுக்கு இரையாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கலாம்?

யாழ். கடல் நீரேரியிலும், தீவகக்கடற்பரப்பிலும் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இந்திய இழுவைப் படகுகளின் நடமாட்டத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளபோதும், இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளைச் சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்பினுள் கொண்டுவருவதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்கள் சங்கங்களினால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த யதார்த்த நிலைமைகளை தமிழக அரசியல் வாதிகள் புரிந்து கொள்வது அவசியம். தம்முடைய குறுகிய அரசியல் நோக்கங்களை அடைவதற்கு முயற்சிசெய்யாமல், இந்திய மீனவர்களுக்கு உண்மை நிலைகளை உணரவைத்து அவர்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

சர்வதேச கடல் எல்லையை மதிப்பது தொடர்பான விளக்கங்களை இந்திய மீனவ சமூகத்தவருக்கு உணர்வு பூர்வமான முறையில் உணர்த்தக் கூடிய தேவையின் அவசியத்தை அனல்வார்த்தைகளைக் கக்கும் இந்த அரசியல் தலைவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

சட்டவிரோதமான முறையில் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி அத்துமீறி நுழைபவர்களுக்கான தண்டனை மரணமாக இருக்கக்கூடாது.

மரணம்தான் தண்டனையாக இருந்தால் தற்போது நிலவிவரும் இலங்கை-இந்திய நட்புறவை அதுவெகுவாகப் பாதிக்கும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் உணர்ந்து செயலாற்றவேண்டும்.

இவ்விவகாரம் தொடர்பாக இலங்கை அரசுடன் ஆராய்வதற்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் இன்று கொழும்புக்கு வருகைதரவுள்ளமை முக்கிய அம்சமாகும். இதன் மூலம் இவ்விவகாரத்துக்கு ஆக்க பூர்வமான முடிவு எட்டப்படுமென எதிர்பார்க்கிறோம்.

- ஆசிரியர்

# நாட்டின் பல்வேறு அபிவிருத்திகளுக்கு ஊடகவியலாளரின் பணி அளப்பரியது

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டுக்காகப் பாடுபடுவது ஊடகவியலாளர்களின் தலையாய கடமை என வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சு, தகவல் திணைக்களத்தினுடன் இணைந்து பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (29.01.11) நடத்தப்பட்ட வெகுஜன ஊடக செயலமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதியின் தலைமையின் கீழ் சுமார் 25 வருடங்களின் பின்னர் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கும் மக்களுக்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் ஊடகவியலாளர்கள் அளப்பரிய பணியை ஆற்ற வேண்டும்.

இதன்போது சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட ஊடகவியலாளர்கள் தமக்கிடையே கட்டியெழுப்பும் கருத்துக்களூடாக பெற்றுக் கொள்ளும் அறிவின் பெறுபேறுகளை நாட்டுக்காக வழங்க வேண்டும்

2500 ஆம் ஆண்டு பழமையான வரலாற்றைக் கொண்ட நாடு என்ற வகையில் இலங்கை எந்தவொரு நாட்டுடனும் போட்டி போடமுடியும். அதற்கான தேசப்பற்று, சிந்தனை, நுட்பத்துடன் கூடிய மனிதவளத்தை எமது நாடு கொண்டுள்ளது.

இதுபோன்ற செயலமர்வுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அறிவும் தொடர்பும் புத்தகங்களினூடாகக் கிடைக்கும் அறிவை விடப் பெறுமதி வாய்ந்தது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒரு தொகுதியினர் விடுதலை

(வவுனியா)

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் ஒருதொகுதி முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் ஒருவருடத்திற்கு மேலாக புனர்வாழ்வ பெற்றுவரும் முன்னாள் போராளிகளே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுதலைசெய்யும் அரசின் வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை 8 ஆயிரம் பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் 4 ஆயிரம்பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதுடன் இவர்களில் ஒரு தொகுதியினர். விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (39)

## எச்.ஐ.வி வைரஸ் தொற்றினால் 1317பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் 1987 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு இறுதி வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 317 பேர் எச்.ஐ.வி வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக எயிட்ஸ் நோய் கட்டுப்பாட்டுத் திட்ட அலுவலகத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான கணிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 340 பேர் இந்நோய்த் தொற்றுள்ளவர்கள் என இனங்காகணப்பட்டுள்ளதாகவும் 221 பேர் இந்நோயாளர்களாகி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட 2010 ஆம் ஆண்டு மட்டும் 121 பேர் ஏச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளமை சிகிச்சை மூலம் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 77 ஆண்களும் 44 பெண்களுமாவர் அத்துடன் 31பேர் எயிட்ஸ் நோயாளராக உள்ளதுடன் 19பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் எச்.ஐ.வி எயிட்ஸ் நோய்த் தொற்றுதொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் இந்நோயைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்நோயத் தொற்றுக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவ வசதிகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கைத் துறைமுகங்களில் தங்கிச்செல்லும் கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

ஆசியாவின் கொள்கலன் கப்பல் போக்குவரத்து சேவையின் கேந்திர ஸ்தானமாக விளங்கி வரும் இலங்கையின் கப்பல் சேவைகளை வலுவூட்டும் எண்ணத்துடன் அரசாங்கம் மனித வளங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இப்பொழுது மேற்கொண்டு வருகிறது.

வணிக சட்டம் மற்றும் நடைமுறையை அபிவிருத்தி செய்வதற்கான ஸ்தாபனம் இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து கப்பல் போக்குவரத்து சட்டம் மற்றும் அதன் நடைமுறை பற்றிய பயிற்சிப் பாசறையைக் கடந்த 23 ஆம் திகதியன்று கொழும்பில் ஆரம்பித்து வைத்தது.

தெற்காசிய பிராந்தியத்தில் கப்பல் போக்குவரத்துத் துறையில் முன்னணி நாடாக இலங்கையை மாற்றுவதற்கு இத்தகைய பயிற்சிகள் பேருதவியாக அமையும். திருகோணமலை ஒலுவில் அம்பாந தோட்டை மற்றும் கொழும்புத் துறைமுகங்களை சர்வதேச தரத்திற்கு வளர்ச்சி அடையச் செய்வதன் மூலம் மாதமொன்றுக்கு இலங்கைத் துறைமுகங்களில் தரித்துச் செல்லும் கொள்கலன் கப்பல்களின் எண்ணிக்கையை 500 ஆக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

உலகிலுள்ள மிகப் பெரிய துறைமுகங்களான ஜெர்மனியின் ஹெம்பர்க் துறைமுகம், ஹொங் கொங் துறைமுகம், சிங்கப்பூர் துறைமுகங்களைப் போன்று நவீன வசதிகளைக் கொண்ட பாரிய துறைமுகங்களாக கொழும்பு மற்றும் அம்பாந் தோட்டைத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் இப்பொழுது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவ்விரு துறைமுகங்களில் பழுதடைந்த கப்பல்களைத் திருத்துவதற்காக விசேட பிரிவுகளும் ஏற்படுத்தப்படவுள்ளன.

## நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு படையினரின் பங்களிப்பு அவசியமானது

(கொழும்பு)



விமானப் படையினருக்கு புதிய தொழில் நுட்பங்களைக் கையாள்வது தொடர்பில் பயிற்சிகள் வழங்கியுள்ளோம். அவற்றைக் கொண்டு பொருளாதார அபிவிருத்திக்கு படையினர் உதவவேண்டும் என கூட்டுப்படை பிரதானியும் விமானப்படைத் தளபதியுமான எயார் மார்ஷல் ரொஷான் குணதிலக தெரிவித்தார்.

திருகோணமலை சீனன்குடா விமானப் படைப் பயிற்சித் தளத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## மீன்பிடிவலைகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில்மீள்குடிமர்ந்துள்ள 70 கடற்தொழிலாளர்களுக்கு சுவிஸ்நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான அமைப்பு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மீன்பிடி வலைகளை வழங்கியுள்ளது.

இந்த நிவாரணம் ஒவ்வொரு கடற்தொழிலாளர்களுக்கும் தலா 82 ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டுள்ளன.

மருதங்கேணி கிராமசேவையாளர் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கும் தாளையடி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கும் இம் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுண்கலைப்பட்டதாரிகளுக்கு விரைவில் நேர்முகத் தேர்வு

(அச்சுவேலி)

**நுண்கலைப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்காக கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்விற்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்படாமையால் பாதிக்கப்பட்ட நுண்கலைப் பட்டதாரிகளுக்கு விரைவில் நேர்முகத் தேர்வுகள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்கான சகல தகமைகளைக் கொண்டிருந்த போதிலும் விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்வதில் ஏற்பட்ட தவறு காரணமாக நேர்முகத் தேர்வுக்குரிய கடிதங்கள் அனுப்பிவைக்கப்படாதவர்களுக்கே விரைவில் நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

இதேவேளை, விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்யும் போது வர்த்தமானி அறிவித்தலில் காணப்பட்ட தெளிவின்மையே இத்தவறு நிகழ்வதற்கான காரணமாக அமைந்தது என பாதிக்கப்பட்ட நுண்கலைப் பட்டதாரிகள் தெரிவிக்கின்றனர். (03)

## கடலோட்டு இயந்திரவியல் பயிற்சி விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியில் ஒன்பது மாதகால டெக் அலுவலர் மற்றும் கடல் மாலுமிப் பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்வதற்காக இத்துறையில் ஆர்வமுள்ளவர்களிடம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறி முதல் தடவையாக கொழும்பு சமுத்திரவியல் சர்வகலாசாலையின் அனுசரணையுடன் நடத்தப்படவிருப்பதாக கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் ஆர். செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார். இக்கற்கை நெறிக்கு விண்ணப்பம் செய்வோர் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் கடல் அனுபவம் உள்ளவராகவும் இருக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். விண்ணப்பங்களை கடலோட்டு மற்றும் எந்திரவியல் கல்லூரியில் நேரடியாக ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## பெற்றோருக்கான கணனி வகுப்பு கடந்த வாரம் முதல் ஆரம்பம்

(அச்சுவேலி)

கிராமிய மட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணனி அறிவினை மேம்படுத்தும் வகையில் யாழ். புத்தக லட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில் பெற்றோர்களுக்கான கணனி வகுப்புக்கள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குப் பெற்றோர்களின் பங்களிப்பு உறுதுணையாக அமையக்கூடிய வகையிலும், பெற்றோர்களிடம் கணனி அறிவினை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் பாடசாலை அதிபர் கு. ரவிச்சந்திரன் தலைமையில் கணனித்துறை ஆசிரியர் சி. பிரகாசன் அவர்களினால் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வகுப்பில் ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதி, புத்தகலட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 15 பெற்றோர்கள் கலந்து கொண்டுள்ளனர். (03)



**சிறுவர் பாதுகாப்பு அமைப்பினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய அனர்த்த நாள் சித்திரப் போட்டியில் யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவன் லோ. சிந்துஜன் தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இரண்டாமிடம் பெற்ற மாணவனுடன் பயிற்றுவித்த ஆசிரியரைக் காணலாம்.**

## பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் படையினரால் விவசாயச் செய்கை

(யாழ்ப்பாணம்)

பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் படையினர் தற்போது விவசாய நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகக் கொழும்பு இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் சுமார் 47 ஏக்கர் நிலப்பரப்பில் படையினர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு செய்கை பண்ணப்படும் மரக்கறி வகைகள், யாழ். படைத் தலைமையகத்திற்குரிய 51ஆவது படைப் பிரிவின் அனைத்துப் படைத் தளங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

அத்துடன் விடுமுறையில் வீடு செல்லும் படையினருக்கும், மிகவும் குறைந்த விலையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. யாழில் கடமையாற்றும் படையினர் விடுமுறையில் வீடு செல்லும்போது கைகளில் பெரிய பொதிகளை எடுத்துச் செல்வது இதனாலேயே ஆகும்.



அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தும் வகையில் படையினர் தமக்குத் தேவையான பயிர்ச் செய்கையை மேற்கொள்வது பாராட்டத்தக்கது என அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

## நிழல்குடை அமைப்பு

(தும்பளை)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகள் இடம்பெற்றவேளை, இடிக்கப்பட்ட நிழல்குடைகள் மீளவும் அந்த வீதியில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன்படி மந்திகைச் சந்தியில் இருந்த நிழல் குடையும் இடிக்கப்பட்டநிலையில், தற்போது மீளவும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. (62)

## வாயிற் கதவு அமைப்பு

(தும்பளை)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் திக்கமுனையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்திற்குக் கடந்த பல வருடங்களாக வாயிற்கதவு இல்லாததனால் மைதானத்தில் கால்நடைகள் புகுந்து சேதங்களை ஏற்படுத்தியதுடன், இரவு வேளைகளில் அங்கு படுத்துறங்கியும் வந்தன. இந்த நிலையில் விளையாட்டுக்கழகத்தினர் தற்போது மைதானத்திற்கு அழகிய வாயிற் கதவொன்றை அமைத்துள்ளதனால் மைதானம் எவ்வித பாதிப்புமின்றி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (62)

## பாடசாலைத்தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் பாடசாலைத் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாசாலை அரங்கில் அதிபர் கா. சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக நூலக உதவிப் பதிவாளர் மு. சின்னராசா வழங்கவுள்ளார். இந்நிகழ்வில் பெற்றோர், பாடசாலை நலன் விரும்பிகளைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்ட உள்ளூராட்சி சபைகளை முழுமையாகக் கைப்பற்றுமாம் கூட்டமைப்பு

(மன்னார்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் உள்ள 05 உள்ளூராட்சிச் சபைகளையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முழுமையாகக் கைப்பற்றும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரசபைத் தேர்தலின் போது வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட வேளை, வெற்றிபெறக்கூடிய தகுதியான வேட்பாளர்கள் சிலர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை வருத்தமளிக்கின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தமிழ் பேசும் மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கவேண்டுமென மேலும் அவர் தெரித்தார்.



**ஜேர்மனியில் இருந்து வருகை தந்த சுப்பிரமணியம் குமாருக்கு சிறப்பளிக்கும் வகையில், அண்மையில் ஒன்றுகூடல் நிகழ்வொன்று தும்பளை மேற்கு சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. புதிய சனசமூக நிலையக் கட்டட நிதிக்காக புலம்பெயர் ஊர் மக்களிடம் நிதி சேகரிப்பதற்குப் பொறுப்பாகவிருந்து இவர் சிறப்பாக செயற்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (62)**

## யதார்த்த நிலையைக்கருத்திற்கொண்ட நாம் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவில்லை

### ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி) தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களின் அரசியல் கட்சிகளுக்கிடையிலான ஐக்கியத்தையும் எமது கட்சியின் யதார்த்த நிலையையும் கருத்தில் கொண்டு இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் நாம் பங்குகொள்ளவில்லையென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முனனணியின் (பத்மநாபா அணி) தெரிவித்துள்ளது.

இது குறித்து முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த காலங்களில் எமது அரசியல் வேலைத திட்டங்களை மக்கள் மத்தியில் தக்க வைப்பதற்காகவும், மக்களோடு உறவுகளைப் பேணுவதற்காகவுமே நாம் தேர்தலில் பங்குபற்றினோம். இன்று மக்களோடு நெருங்கிப் பழகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும் தேர்தல்களில் எமது கட்சி வெற்றிகரமான ஒன்றாக இருப்பதற்கான மக்கள் பலம் இப்போது எம்மிடம் இல்லை. அதனை வெற்றிகரமாக ஆக்குவதற்கான கட்சிக் கட்டமைப்புப் பலத்தையும் நாம் இன்னமும் அடையவில்லை.

சமூகத் தலைமை என்பது வெறுமனே தேர்தல்களைப் பற்றி மாத்திரம் கருத்தில் கொண்டதாக அல்லாமல்,பரந்துபட்ட மக்கள் சக்தியைத் தன்னகத்தே திரட்டி உண்மையான மக்கள் தலைமையாகப் பரிணமிக்க வேண்டும். அரசியல் தலைமைத்துவம் ஒரு சமூக இயக்கமாகச் செயற்படவேண்டும் எனக் கருதுகிறோம்.

யுத்தத்திற்குப் பிந்திய சூழ்நிலையில் தேசிய ஒடுக்குமுறைகள், சுரண்டல்கள், சமூகத் தீண்டாமைகள், ஊழல்கள், பெண் அடிமைத்தனம், திட்டமிட்ட குடியேற்றம் மற்றும் கலாசார சீரழிவுகள், அரசியல் பொருளாதார ஆக்கிரமிப்புக்கள், சீரழியும் கல்வி முறைகள், நியாயமற்ற நீதி என்று பயத்துடனான வாழ்க்கை, அடிப்படைச் சுதந்திரங்களுக்கு உத்தரவாதமின்மை என இன்று நிலவும் பாரதூரமான பிரச்சினைகள் தொடர்பாக நாம் விழிப்புணர்வுடன் மக்களோடு இணைந்து செயற்பட வேண்டியிருக்கிறது.

எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மக்கள் நேர்மையானவர்களாகவும், நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் உள்ள மக்களின் உண்மையான சேவையாளர்களுக்கு தங்கள் ஜனநாயக உரிமையான வாக்குகளைச் சரியாக அளித்துத் தேர்வு செய்ய வேண்டும் என்றும் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறோம்.

எமது நிலைப்பாடு கண்டு போற்றுவோர் போற்றட்டும். தூற்றுவோர் தூற்றட்டும். உண்மை நிச்சயம் வெல்லும். நாம் ஏன் தேர்தலில் பங்குபற்றவில்லை என்னும் விடயத்தில் எமது மக்களிற் பெரும்பாலோர் எம்மைப் புரிந்து கொள்வார்கள் என்பதை நாம் நம்புகிறோம் என அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாச்சிக்குடா கடற்தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன



(கிளிநொச்சி)

கடந்தகால போர் நடவடிக்கை காரணமாக தொழில் உபகரணங்களை இழந்த நாச்சிக்குடாப் பிரதேச கடற்தொழிலாளர்களுக்கு மீளவும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு தொகுதி வள்ளங்களும், வெளி இணைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

கடற்தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நாச்சிக்குடா யாகப்பர் இறங்குதுறையில் நடைபெற்றது. ஒவ்வொன்றும் 3 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள், பிரதேசத்தைச் சேர்ந்த 25 கடற்தொழிலாளர்களுக்கு ஐம்பது வீத மானியத்திலும், ஐம்பது வீத வட்டியில்லாக் கடனிலும் வழங்கப்பட் டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மேற்படி கடற்தொழில் உபகரணங்களை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

உபகரணங்களை வழங்கிய பின்னர் உரையாற்றிய அவர் - எதிர்காலத்தில் அரசு தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து கடற்தொழிலாளர்களின் தொழிலினை மேம்படுத்துவதற்கான மேலதிக உதவிகளை வழங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கடற்றொழிலாளர்கள் இவ்வுதவிகளை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் இதன் பெறுமதி மிக அதிகமானது. ஒரு கடற்றொழிலாளருக்கு செய்யும் வாழ்வாதார உதவியினைக் கொண்டு பத்து விவசாயிகளுக்கான வாழவாதார உதவிகளை மேற்கொள்ள முடியும் எனவே அதன் பெறுமதிக்கேற்ப இவ்வுதவிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்லவேண்டும் என்று கூறியதுடன், இவ்வுதவிடிகளுக்கான அனுசரணை வழங்கிய யு.என்.டி.பி. நிறுவனத்திற்கு மக்கள் சார்பாக நன்றியினையும் தெரிவித்துக் கொண்டார்.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் ஏற்பாடு செய்யபபட்ட இந் நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் வசந்தகுமார், யு.என்.டி.பி. வன்னிப்பிராந்திய தலைமை அதிகாரி நவநீதன், அதன் திட்ட அதிகாரி ரமணேஸ், கிளிநொச்சி நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் கணேசமூர்த்தி, பிரதேச பங் குத்தந்தை மரியதாஸ், கிராம அலுவலர் வாசுகி, பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் கடல் றொழிலாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (29)



கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலையின் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றவேளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலி தெற்கு சனசமூக உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராஜா, விளையாட்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கிராம உத்தியோகத்தர் செல்வி தா. கீர்த்திகா, ரவிபாலா, ஸ்கந்தவரோதய ஆரம்ப பிரிவு அதிபர் நந்தீஸ்வரன் ஆகியோர் நிற்பதனையும் காணலாம்.

# எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு யாழின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

## தளபதி ஹத்துருசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளதாக, யாழ்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகளில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

யாழ். நகர் உட்படப் பல பகுதிகளிலும் இராணுவப் படையணியினர் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இரவு வேளைகளில் சுற்றுக் காவல் நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபடவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

முப்பது வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாகப் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்த யாழ்ப்பாண மக்கள், தற்போது சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றவேளை, யாழ்ப்பாணத்தில் அசம்பாவிதச் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.



யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் அசம்பாவிதச் சம்பவங்கள் தனிப்பட்ட தேவை கருதிய சம்பவங்களாகவே அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தப் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் கடமைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் மீள்குடியமர்ந்த அரியாலை மக்கள்

(நாவற்குழி)

அரியாலை கிழக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது குடிமனை வசதிக்கான வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் இப்பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மக்கள் இருப்பிடங்களை அமைத்துக் குடியமர்ந்து வருகின்றனர்.

இந்த மக்கள் தமக்கு வீட்டுத் திட்டத்தின் கீழ் குடிமனை அமைப்பதற்கான திட்டத்தில் இணைந்து கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (25)

# அதிகரித்த உதவி தேவைப்படுவோருக்கு ஐ.சி.ஆர்.சி உதவிகளை வழங்கியது

(யாழ்ப்பாணம்)

அதிகரித்த உதவிகள் தேவைப்படுவோருக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை இயக்கத்தினுள் அடங்கும் இதர அங்கங்களுடன் இணைந்து பல்வேறு பணிகளைக் கடந்த செப்ரம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கிடையில் ஐ.சி.ஆர்.சி ஆற்றியுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.சி.ஆர்.சியின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க மருதங்கேணியில் மீள்குடியேறிய மக்களுக்கு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து நடமாடும் மருத்துவ சிகிச்சையை வழங்கியது. இதன்மூலம் 1085 நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

அத்துடன் யாழிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு கூரைத்தகடுகள் மற்றும் இதர பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டதுடன், இயலுமையை அதிகரிக்கவென இதர ஒத்துழைப்புகளும் தொழில்நுட்ப உத விகளும் வழங்கப்பட்டன.

அத்துடன், வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலைக்குத் தொடர்ந்து நீரை விநியோகிப் பதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு உதவியது.

மன்னாரில் முப்பது உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகளை வழங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு உதவியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டின் வீதிப் புனரமைப்பிற்காக தினமும் எடுத்துவரப்படும் தார்க்கலவை

(நல்லூர்)

யாழ். குடாநாட்டு வீதிப் புனரமைப்புகென தார்க் கலவை தினமும் கனரக வாகனங்கள் மூலம் எடுத்துவரப்படுகின்றது.

அண்மைக்காலத்தில் பெய்த கடும் மழை காரணமாக வீதிகள் அனைத்தும் குன்றும் குழியுமாகப் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில், யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகள் தொடக்கம் உள்ளூர் வீதிகள் அனைத்தும் காணப்படுகின்றன.

பிரதான வீதிகளில் ஏற்பட்டிருக்கும் சேதங்களைச் .சீர் செய்யும் பொருட்டு இந்தத் தார்க்கலவைகள் தெற்கிலிருந்து எடுத்துவரப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தார்க்கலவையைக் கொண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டின் குன்றும் குழியுமாகக் காணப்படும் அனைத்து வீதிகளையும் செப்பனிடும் பணிகள் சகல இடங்களிலும் துரித கதியில் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. (25)

## இன்றைய பலன்

(30.01.2011 ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
விகிர்தி தை 16
இராகுகாலம் 5.06– 6.36, சுபநேரம் 9.36 –11.06,
ஏகாதசி, காலை 6.49, கேட்டை, மரணயோகம்
மு.ப.10.57, துலாதசி பி.இ.6.26, ஏகாதசி விரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

**மேடம்:**– நேர்மையான பேச்சு, எதிலும் வெற்றி, கடன் கொடுத்தல்.

**ரிஷபம்:**– அதிஷ்டமான நாள், நண்பர் உதவி, மேலோர் பாராட்டு.

**மிதுனம் :**– வேண்டாத வார்த்தை, மனக்குழப்பம், ஆவேசப்படல்.

**கடகம்:**– மனநிறைவு, தாய்வழி உதவி, தேக நலன் விருத்தி.

**சிம்மம்:**– சகோதரரால் உதவி, நினைத்த காரியச் சித்தி, இனசனக் கொண்டாட்டம்.

**கன்னி :**– புத்திசாலித்தனமான பேச்சு, அடுத்தவர்களுக்கு உதவி, நண்பர் பாராட்டு.

**துலாம் :**– பொருள் இழப்பு, அரச பயம், திடீர்ப் பிரயாணம்.

**விருச்சிகம்:**– அதிக மகிழ்வு, விருப்பமான செய்தி வரல், குடும்பத்தில் மகிழ்வு.

**தனுசு:**– பொருளில் ஆசை, புதிய முயற்சி, தனச் சேர்க்கை.

**மகரம்:**– வரவுக்கதிகமான செலவு, தர்க்கப்படல், மனக்குழப்பம்.

**கும்பம் :**– நினைத்த காரியச் சித்தி, தாய்வழி உதவி, மனைவியால் இன்பம்.

**மீனம்:**– புதிய முயற்சி, நீண்டதூரப் பயணம், காரிய சித்தி.

# இலங்கையுடனான உறவை பலப்படுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்குமாம்



(கொழும்பு)

இலங்கையுடனான வலுவான உறவினை இந்தியா மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக கே காந்தா தெரிவித்துள்ளார். நேற்று "இந்திய இல்லத்தில்" இடம் பெற்ற இந்தியாவின் 62 ஆவது குடியரசுதினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரு தரப்பு உறவு வர்த்தகம், முதலீடு,கலாசாரம், விஞ்ஞானமும் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகிய விடயங்களை மேலும் சக்தி மிக்கதாக்க இந்தியா உறுதி பூண்டுள்ளதாகவும் அசோக் கே காந்தா குறிப்பிட்டுள்ளார். இதுதவிர இலங்கையில் நிரந்தர சமாதானம் மற்றும் இலங்கை மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளவும் அவர் உறுதியளித்துள்ளார். இந்த நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அதேவேளை, பல அமைச்சர்கள் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராஜதந்திரிகள் மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் வன்முறைகளை ஒழிக்க பொலிஸ் திணைக்களம் தயார்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களைக் கண்காணிக்கவும தேர்தல் வன்முறைகளை எதிர்கொள்வதற்கும் பொலிஸ் திணைக்களம் தேர்தல் பிரிவொன்றை பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தலைமையில் ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் பிரசாரசுவரொட்டி, மற்றும் கட் அவுட்டுக்களை அகற்றுவதற்கு ஊழியர்களும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பொலிஸ் அதிகாரியொருவரின் கீழ் தனியான



தேர்தல் கண்காணிப்புப் பிரிவொன்று ஏற்படுத்தப்படவுள்ளது. தேர்தல் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்தால் இவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்தார்.

# 20 வீதமான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகத் தகவல்



(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகள், சுயேட்சைக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களில் இருபது வீதமானவை நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் 301 உள்ளூராட்சிச் சபைகளுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்தன.

இவற்றுக்கு 2047 வேட்பு மனுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதில் 450 வேட்ப மனுக்கள் பல்வேறு தவறுகள் காரணமாக நிராகரிக்கப்பட்டன.

இவற்றில் 148 வேட்பு மனுக்கள் அரசியல்கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்டவை ஏனைய 302 வேட்புமனுக்கள் சுயேட்சைக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்டவை.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட 1597 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இவற்றில் 1134 வேட்பு மனுக்கள் அரசியல் கட்சிகளினாலும் 463 மனுக்கள் சுயேட்சைக்குழுக்களினாலும் சமர்ப்பிக்கப்பட்டவை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவருக்கே ஆளும் கட்சியில் போட்டியிட சந்தர்ப்பம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஊழல் புரிந்தவர்களுக்கு இடமில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறியிருந்தாலும் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் பலர் வேட்பாளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) விமர்சித்துள்ளது.

மஹர, கட்டுநாயக்க, சீதுவைப் பகுதிகளில் ஊழல் மற்றும் நிதி மோசடிகள் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கும் ஐ.ம.சு.முன்னணியினால் வேட்பாளர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கடந்த தேர்தலின்போது முதலில் நாட்டை அபிவிருத்தி செய்து பின்னர் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் மக்களிடம் ஆணை கோரியது. இத் தேர்தலில் மேற்படி சுலோகம் தலைகீழாக மாற்றப்பட்டு, கிராமங்களை முதலில் அபிவிருத்தி செய்வதற்கு ஆணை கோரப்படுகிறது.

கடந்த தேர்தல்களில் பொதுமக்களையும், அரச ஊழியர்களையும் அரசாங்கம் ஏமாற்றியது. பட்டதாரிகளை ஜனசபா செயலாளர்களாக நியமிப்பதாகவும் அரசாங்க ஊழியர்களுக்கு 2500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாகவும் உறுதியளித்தார்கள்.

அத்துடன் அவர்கள் தமது சொந்த உறுப்பினர்களைச் சிரேஷ்ட அமைச்சர்களாக நியமித்ததன் மூலம் ஏமாற்றியுளளார்கள்.

தற்போது அவர்கள் தமது தவறைத் திருத்துவதற்கு ஆணை கோருகிறார்கள். அரசாங்கம் ஏற்கெனவே இதைச் செய்வதற்கு அதிக கால அவகாசமும் அரசியல் பலமும் இருந்தது என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# பொதுமகனை கடித்துக் குதறிய புத்தளம் பிரதேச பொலிஸார்



(கொழும்பு)

புத்தளம் ஆனமடுவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வர், பொதுமகன் ஒருவரைக் கண்டபடி தாக்கியுள்ளது மாத்திரமன்றி, கடித்துக் குதறிக் காயமேற்படுத்தியுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான நபர் புத்தளம் நவகத்தேகம பிரதேசத்தில் வசிக்கும் ட்ராக்டர் (உழவு இயந்திர) சாரதி யொருவராவார். பொலிசார் அவர் மீது மேற்கொண்ட தாக்குதல்கள் மற்றும் கடித்துக் குதறல்கள் காரணமாக அவர் தற்போது நிக்கவெரட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான தாக்குதல் குறித்து புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே அவ்வாறான மிருகத்தனமான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நவகத்தேகம பொதுமக்கள் ஒன்று திரண்டு பிரதான பாதையில் ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டனர்.

# கலாநிதிப் பட்டம் பெறுவோர் தொகை இலங்கையில் அதிகரித்துள்ளதாம்

## என்கிறார் அமைச்சர் திஸநாயக்க



(கொழும்பு)

இலங்கையில் இப்போது கலாநிதிப் பட்டம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. யார் யாருக்குப் பட்டம் வழங்கலாம்? என்கிற விபஸ்தையே இல்லாமல் போய் விட்டது என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தா கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கல்வித்துறை சம்பந்தமான கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இக்கூட்டத்தில் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது, பல்கலைக் கழகங்கள் மட்டுமே கலாநிதிப் பட்டங்களை வழங்க வேண்டும். ஆனால், இன்று யார் யாரோ எல்லாம் யார் யாருக்கோ கலாநிதிப் பட்டங்களை வழங்குகின்றனர்.

கலாநிதிப் பட்டங்களுக்குப் பொருத்தமற்றவர்களே அநேகமாக இன்று இப்பட்டத்தைப் பெற்றுள்ளனர். ஏன் சில அரசியல் வாதிகள் கூட இன்று கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளனர். இந்நிலைமை உடனடியா.க முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# பெருமளவு போலி நோட்டுகள் பொலிஸ் சோதனையில் சிக்கின

(கொழும்பு)

இரண்டு இலட்சத்து அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான போலி நோட்டுக்கள் கொழும்பில் நடத்தப்பட்ட விசேட சோதனையின்போது கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிசார் அறிவித்துள்ளனர்.

கொழும்பு கோட்டைப் பொலிசார் மேற்கொண்ட விசேட சோதனையொன்றின் போதே பிரஸ்தாப நோட்டுகள் புறக் கோட்டை மற்றும் பொரளை பகுதிகளில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஆயிரம் ரூபா நோட்டுகள் 260 இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பொரளை, குணசிங்கபுர மற்றும் நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அத்துடன் போலி நோட்டுக்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட கணனி இயந்திரம் பொரளை பகுதியில் இருந்த வீடொன்றினுள் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

# மதுபோதையிலிருந்த கொன்ஸ்டபிள் கைது

(கொழும்பு)

கடமை வேளையில் மது போதையுடன் காணப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பதுளை பொது வைத்தியசாலைக்கு அருகில் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் மது போதையுடன் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று மாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டின் காரணமாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்பொலிஸ் கான்ஸ்டபிள் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது அவர் மதுபோதையில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த விஜேசூரியவின் பணிப்பின் பேரில் பதுளை பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# ஈடன் கார்டன் மைதான மாற்றம் இங்கிலாந்து வீரர்கள் அதிருப்தி

(லண்டன்)

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவிருந்த உலகக் கிண்ணப் போட்டி வேறு மைதானத்துக்கு மாற்றப்பட்டுள்ளது மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.


இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஸ்டுவார்ட் பிராட் தனது டிவிட்டர் பக்கத்தில், ஈடன் கார்டன் மைதானத்தில் ஒரு இலட்சம் ரசிகர்கள் முன்னிலையில் விளையாடுவது என்பது மிகச்சிறப்பானதாகும்.

ஆனால் ஆட்டம் வேறு மைதானத்துக்கு மாற்றப்பட்டிருப்பது ஏமாற்றமளிக்கிறது என்று கூறியுள்ளார்.

உலகக் கோப்பை அணியில் இடம்பெறாத கிறிஸ் டிரம்லெட் கூறுகையில், இது முற்றிலும் பொருத்தமற்ற ஒன்று.

பெரிய ஆட்டம் கடைசி நேரத்தில் மாற்றப்பட்டுள்ளது. எனவே அங்கு மீண்டும் ஆட்டத்தை நடத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஏராளமானோர் ஏற்கெனவே கொல்கத்தா செல்வதற்கான விமானத்தில் டிக்கெட் முன்பதிவு செய்துவிட்டனர். அங்கு செல்வதற்காக கிரிக்கெட் ரசிகர்கள் ஏராளமான பணத்தைச் செலவு செய்துள்ளனர் என்று கூறியுள்ளார்.



# முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு இந்திய கிரிக்கெட் சபை கோரவுள்ளது


(புதுடில்லி)

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவிருந்த உலகக் கிண்ணப் போட்டியை நடாத்த அனுமதி மறுப்பு முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கோர இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபைக்குக் கடிதம் எழுதவுள்ளோம். ஆனால் இந்த விவகாரத்தில் சர்வதேச கிரிக்கெட் சபை தான் முடிவு எடுக்க வேண்டும். ஈடன் கார்டன் மைதானத்தில் ஆட்டம் நடைபெறும் என்று நம்புகிறோம் என்று இந்திய கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈடன் கார்டன் மைதானத்தில் பெப்ரவரி 27ஆம் திகதி நடைபெறவிருந்த முதல் ஆட்டத்துக்கு சர்வதேச கிரிக்கெட் சபை அனுமதி மறுத்தது. இதையடுத்து மேற்கு வங்க கிரிக்கெட் சங்கத் தலைவர் ஜக்மோகன் டால்மியா இந்திய கிரிக்கெட் சபை மூலம் சர்வதேச கிரிக்கெட் சபையை அணுகினார். அப்போது மைதானம் புதுப்பிக்கும் பணியை முடிக்க பெப்ரவரி 14ஆம் திகதி வரை காலஅவகாசம் வழங்கவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

## டெண்டுல்கருக்கு பரிசளிக்க வேண்டும்



(மும்பை)

உலகக் கிண்ணத்தை வென்று ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்குப் பரிசு அளிக்க வேண்டும் என்று இந்திய வீரர்களை வினோத் காம்ப்ளி கேட்டுக் கொண்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது சச்சினின் மனதில் நீண்ட காலமாக உள்ளது. அது தான் தனது இலட்சியம் என்றும் கூறியிருக்கிறார். தற்போதைய இந்திய அணி உலகக் கிண்ணத்தை சச்சினுக்காக வென்று தர வேண்டும். இதனைச் செய்வார்கள் 'என்று நம்புகிறேன். இல்லாவிடில் அவர் 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியிலும் தொடர்ந்து விளையாடுவார்.

ஒட்டுமொத்த தேசமும் இப்போது 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. 1983ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இந்தியா வென்றது போன்று மீண்டும் ஒரு முறை 2011 ஆம் ஆண்டும் நிகழ்த்திக் காட்ட வேண்டும். சச்சினின் கனவை டோனி தலைமையிலான அணி நிறைவேற்றித் தர எனது வாழ்த்துக்கள் என்றார்.

# நியூசிலாந்துடனான மூன்றாவது போட்டி 43 ஓட்டங்களால் பாகிஸ்தான் வெற்றி

(கிறைஸ்ட்சர்ச்)

நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது போட்டியில் பாகிஸ்தான் அணி 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆறு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று பகலிரவு ஆட்டமாக நியூசிலாந்தின் கிறைஸ்ட்சர்ச்சில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் 'தீர்மானித்தது. இதற்கமைய முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் ஹபீஸ் 115, உமர் அக்மல் 44 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் அணித் தலைவர் அப்ரிடி 25 பந்துகளை எதிர் கொண்டு ஐந்து சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சௌத்தி, மில்ஸ், பின்நெற் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 294 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஸ்ரைரிஸ் 46, வில்லியம்சன் 42, குப்ரில் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமர் குல், சௌஹைல் தன்வீர், ரானா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக மொகமட் ஹபீஸ் தெரிவானார்.

இதன் மூலம் ஆறு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டாவது போட்டி மழையால் கைவிடப்பட்டமை தெரிந்ததே.





இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டிக்கான கிண்ண அறிமுக நிகழ்வில், இரு அணித் தலைவர்களும் கிண்ணத்தை அறிமுகப்படுத்துவதைக் காணலாம். இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிண்ணம் வென்றார் கிம் கிளைஸ்டர்ஸ்



(சிட்னி)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் 3-6, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டார். இவர் சீனாவின் லீ நாவை எதிர்கொண்டே கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு-கிழக்கு மாகாண அணிகளுக்கிடையிலான வலைப்பந்து

# தெல்லிப்பளை யூனியன் அணி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் தெல்லிப்பளை யூனியன் அணி சம்பியனாகியுள்ளது.

இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்துடன் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சம்மேளனம் இணைந்து நடாத்திய இந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி விஜய ரூபசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டித் தொடரில் வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எட்டு அணிகள் பங்கு கொண்டன. யாழ். மாவட்டத்திலிருந்து ஐந்து அணிகளும், வவுனியா மாவட்டத்திலிருந்து இரண்டு அணிகளும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஒரு அணியும் பங்குகொண்டன.

இதன் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணியும் தெல்லிப்பளை யூனியன் அணியும் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் பாதி ஆட்டத்தில் 11 - 10 என்ற புள்ளிகள் அடிப்படையில் யூனியன் அணி முன்னிலை வகித்தது.

இந்நிலையில் இரண்டாவது பாதி ஆட்டம் பெரும் பரபரப்பாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், யூனியன் கல்லூரி அணியின் சிறப்பான ஆட்டத்தின் காரணமாக 14 - 04 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இறுதியில் 25 - 14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா கலந்து கொண்டு சிறப்பித்தார். மற்றும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி பொன்னம்பலம், இலங்கை வலைப்பந்தாட்ட பொருளாளர் திருமதி ஜஸ்ரீன் தசநாயக்க, வவுனியா கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி தெய்வேந்திரம் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (12)

## கிரிக்கெட் போட்டி

(கொழும்பு)

யாழ். மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி வரும் செவ்வாய், புதன் கிழமை ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் 19 வயதுப் பிரிவின் 'பிரிவு இரண்டு'க்கான போட்டி மேற்படி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டி இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியாகும்.

ஏற்கனவே, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் இனிங்ஸ் மற்றும் 355 ஓட்டங்களால் வெற்றிபெற்று யாழ். மத்திய கல்லூரி அணி, சிறப்பான ஆட்டத் திறனுடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# ஜனாதிபதி முபாரக் பதவி விலக வேண்டுமென்ற எகிப்திய மக்களின் போராட்டம் தொடர்கின்றது



எகிப்தில் 30 வருட காலமாகப் பதவி வகிக்கும் ஜனாதிபதி முபாரக் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி அந்நாட்டு மக்கள் நடத்திவரும் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினமும் மதியநேர தொழுகைக்குப் பின், நாட்டின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என, அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்காக இணையதளங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளில் குறுஞ் செய்திகள் மூலம் கோடிக்கணக்கான மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. உடன் பீதியடைந்த அந்நாட்டு அரசு, நேற்றுமுன்தினம் முழுவதும் இணையதளம் மற்றும் கையடக்கத் தொலைபேசிச் சேவைகளைத் துண்டித்தது. சேவை நிறுவனங்கள் இந்நிலையில், நாட்டின் பிரதான எதிர்க்கட்சியும், தடை செய்யப்பட்ட இயக்கமுமான முஸ்லிம் சகோதரத்துவ கட்சி, மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவளிப்பதாக நேற்றுமுன்தினம் அறிவித்தது.

அத்துடன் நோபல் பரிசு பெற்றவரும், ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் முன்னாள தலைவரும், எகிப்தின் எதிர்க்கட்சித் தலைவருமான முகமது எல் பரேடியும் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்திருந்தார். கெய்ரோ மசூதி ஒன்றில் அவர் தொழுகை நடத்தினார். ஆனால், அங்கிருந்து வெளியேற அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இது குறித்து அவர் பேசுகையில், எகிப்து வரலாற்றில் இது ஒரு சிக்கலான கட்டம். அரசை வெளியேற்றி மாற்றத்தைக் கொண்டுவர மக்கள் இணைநதுள்ளனர். நாடு வன்முறையில் சிக்குவதை எந்த ஒரு எகிப்தியனும் விரும்பவில்லை. முபாரக் 30 ஆண்டுகளாக ஆடசியில் இருந்துள்ளார். இப்போது அவர் ஓயவு பெறும் நேரம் வந்துவிடடது என்றார்.

மொகந்திசீன் மாவட்டத்தில் இருந்து 10 ஆயிரம் பேர் கொண்ட பேரணி ஒன்று தலைநகர் கெய்ரோவை நோக்கி நேற்று முன்தினம் புறப்பட்டது. ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிரான கோஷங்கள் பேரணியில் எதிரொலித்தன. இந்தப் போராடடங்கள் அனைத்திலும், இளைஞர்கள்தான் அதிகளவில் பங்கு பெற்றனர்.

இதேவேளை, எகிப்தில் அதிபர் ஹோஸ்னி முபாரக், அமைச்சரவையை அதிரடியாகக கலைத்துள்ளார். இதுகுறித்து, அவர் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது, அமைச்சரவை உடனடியாகக் கலைக்கப்படுவதாகவும், எக்காரணம் கொண்டும் அதிபர் பதவியிலிருந்து விலகப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். கலகக்காரர்கள் அமைதி காக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். புதிய அமைச்சரவையில், இளைஞர்கள், நேர்மையானவர்களுக்கு இடம் ஒதுக்க இருப்பதாக அவர் தெரிவித்தார்

இதற்கிடையில், அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சிகள் வெளிவரும் போராட்டங்கள்தான் இவை. அதிபர் முபாரக் உடனடியாக சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும். இருதரப்பும் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கேட்டுக்கொண்டுள்ளார்.





மணலில் சிற்பங்களை தயாரிக்க வல்ல சர்வதேச சிற்பிகள் குழு அவுஸ்ரேலியாவின் பிரதான கடற்கரை வீதி ஒன்றில் மணல் சிற்ப கண்காட்சி ஒன்றை சில நாட்களுக்கு முன்னர் நடத்தியது. உலகம் பூராவும் இருந்து சிற்பிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

நாய், சிலந்திகள், பெண்ணின் உருவ அமைப்பு போன்ற உருவங்களை மணலில் சிற்பங்கள் ஆக்கினர். இவை பார்வையாளர்களின் கண்களுக்கு பெருவிருந்து ஆகின.

# ஆங்சான் சூகியின் கட்சியின் அங்கீகாரம் மீண்டும் இரத்து



(யாங்கூன்) மியான்மர் விடுதலைப் போராட்ட வீரர ஆங்சான் சூகியின் கட்சியின் அங்கீகாரம் ரத்துச் செய்யப்பட்டதை எதிர்த்து புதிதாகத் தாகல் செய்யப்பட்ட மனுவையும் அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

புதிதாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி, அதைத் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார்.

இருப்பினும் கட்சியின் அங்கீகாரம் ரத்துச் செய்யப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் நேரடியாக முறையிடத் திட்டமிட்டுள்ளதாக ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி வழக்கறிஞர் கியாவ் ஹோய் தெரிவித்தார்.

இதுகுறித்து கட்சியின் மூத்த தலைவர்களிடம் ஆலோசித்து முடிவெடுக்கப் படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல் ஏழுபேர் உடல் சிதறிப் பலியாகினர்



(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகரம் காபூலின் மையப் பகுதியில் உள்ள சந்தையில் தற்கொலைப் படை நடத்திய குண்டு வெடிப்பில் 7 பேர் உடல் சிதறிப் பலியாயினர்.


இதுகுறித்து காபூல் நகரப் பொலிஸார் கூறுகையில், மக்கள் அதிகம் கூடுகின்ற சந்தையில் இந்தக் குண்டு வெடிபபு நடந்துள்ளதாகவும், இந்தத் தாக்குதலில் இறந்தவர்களில் 3 பெண்கள் வெளிநாடடைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர்.

மீதிப்பேர் அங்கு வேலை செய்பவர்கள் என்றும் தெரிவித்தனர். இந்தக கொடூர தாக்குதலுக்குத் தலிபான் தீவிரவாத அமைப்புப் பொறுப்பேற்றுள்ளது.

இதற்கிடையே கடந்த சில வாரங்களுக்கு முன் தற்கொலைப் படையினர் மோட்டார் சைக்கிளில் வந்து நடத்திய தாக்குதலில் 4 பேர் பலியாயினர். அமெரிக்கா தனது படையை இந்த ஆண்டு மையத்தில் வாபஸ் பெற உள்ளது குறிபபிடத்தக்கது.

ஞாயிறு நற்சிந்தனை

# “ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது”



ஏழையரின் உள்ளத்தோர், துயருறுவோர், கனிவுடையோர், நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர், தூய்மையான உள்ளத்தோர், அமைதி ஏற்படுத்துவோர், நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் என்னும் பட்டியல் வாழ்க்கைக்கு உதவுமா என்ற ஐயம் எழலாம். நியாயமானதே. ஆனால் இத்தகையோரே வரலாற்றில் வாழ்வோர். அன்னை தெரேசா, மகாத்மா காந்தி இவர்கள் இம்மலைப்பொழிவுப் பகுதியால் ஈர்க்கப்பட்டு, தங்கள் வாழ்வை, அன்பு வழியிலும் அகிம்சை வழியிலும் வாழ்ந்து வரலாறு படைத்தனர். இன்றும் வரலாறு அவர்களை வாழ்த்துகிறது. கடவுளின் வாழ்வில் நாம் பங்கேற்கின்ற பேற்றினை இவ்வுலகிலேயே பெற்றுள்ளோம். இப்பேறு இறுதிக்காலத்தில் நிறைவாக மலரும்.

இயேசு நம்மைப் பேறுபேற்றோர் என வாழ்த்த வேண்டும் என்றால் நாம் அவர் எதிர்பார்க்கின்ற பண்புகளை நம் வாழ்வில் கொண்டிருக்க வேண்டும். கடவுளின் கொடையாக வருகின்ற ஆட்சியில் நாம் பங்கேற்க அழைக்கப்படுகிறோம்.

அந்த ஆட்சியை நமக்கு வழங்குகின்ற கடவுள் முன்னிலையில் நாம் ஏழையரின் உள்ளத்தோராக, கனிவுடையோராக, நீதி வேட்கை கொண்டோராக, இரக்கமுடையோராக, தூய்மையுடையோராக, அமைதியை நாடுவோராக, துன்பத்தின் நடுவிலும் கடவுளை நம்புவோராக வாழ்ந்திட முயன்றிடுவோம்.

**யா. அலெக்ஸ்சாண்டர்**
**மறையாசிரியர், ஆனைக்கோட்டை.**

# கடும் வெப்பத்துடன் கூடிய புதிய கிரகம் கண்டுபிடிப்பு



விண்ணில் சூரிய குடும்பக் கிரகங்கள் மட்டுமின்றி எண்ணிலடங்கா கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்கள் உள்ளன. இது குறித்து ஆராய்ச்சி செய்து வரும் விஞ்ஞானிகள் புதுப் புதுக் கிரகங்களைக் கண்டு பிடித்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது புதிதாக ஒரு கிரகத்தைக் கண்டு பிடித்துள்ளனர்.


டபிள்யூ, ஏ.எஸ்.பி.-33 பி என்று இதற்குப் பெயரிட்டுள்ளனர். இதை எச்.டி. 15082 என்றும் அழைக்கின்றனர். இது மிகவும் கடுமையான வெப்பம் உடைய கிரகமாகும். 7160 பாகை செல்சியஸ் வெப்பத்துடன் இது உள்ளது.

தற்போது இதுதான் மிகுந்த வெப்பமுடைய கிரகம் எனக் கருதப்படுகிறது. ஏனெனில் சூரியனின் வெப்பம் 5,600 பாகை செல்சியஸ்தான். இதற்கு முன்பு கண்டு பிடிக்கப்பட்ட கிரகம் 3,200 பாகை செல்சியஸ் வெப்பம் கொண்டதாக இருந்தது.

அதை மிஞ்சி இரு மடங்கு வெப்பத்தை இது வெளிப்படுத்துகிறது. கடந்த 2006 ஆம் ஆண்டு தான் முதன் முதலாக இந்தக் கிரகத்தை விஞ்ஞானிகள் அறிந்தனர். அதன் பின்னர் தான் ஆய்வு மேற்கொண்டனர். இது வியாழன் கிரகத்தை விட 4 1/2 மடங்கு பெரியது.

மேலும் சூரியனில் இருந்து புதனுக்கும் இடையே 7 சதவீதம் குறைவான தூரத்தில் இது உள்ளது.

# ஊழல் ஒழிக்கப்பட வேண்டுமெனில் இளைஞர் அரசியலுக்கு வரவேண்டும்



(துலே)

ஊழலை ஒழிக்க இளைஞர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என, காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

மராட்டிய மாநிலம் துலே நகரில் துலே, நந்துர்பூர், ஜல்கான், திந்தோரி ஆகிய பாராளுமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 1500 இளைஞர் காங்கிரசார் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசிய, காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி,

தற்போது என்னைப் போன்ற பல புதிய தலைவர்கள், அவர்களின் அரசியல் பின்னணி காரணமாக தலைவர்களாகி உள்ளனர். ஆனால், அதில் மாற்றம் கொண்டுவர நேரம் வந்து விட்டது.

இளைஞர் காங்கிரஸ் அமைப்புக்கு 2 வருடத்துக்கு ஒரு முறை தேர்தல் நடத்தி நிர்வாகிகள் தேர்ந்து எடுக்கப்படுவார்கள். இளைஞர் காங்கிரசுக்கு ஞானத்தந்தையாக, வழி நடத்தும் தலைவராக யாரும் கிடையாது.

பொது மக்களுடனான உங்களது தொடர்புதான் உங்களை வெற்றிகரமாக வழி நடத்தும். பெண்கள் அரசியலுக்கு வராத வரையில் தேவையான மாற்றத்தை கொண்டுவர முடியாது என்றார்.

# அ.தி.மு.க ஆட்சிக்கு வந்தால் கச்சதீவு மீளப்பெறப்படுமாம்

## பழ.கருப்பையா



(சென்னை)

விலைவாசி உயர்வு, பெட்ரோல் விலை உயர்வு, 2ஜி அலைக்கற்றை ஊழல், தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதல் ஆகியவற்றைக் கண்டித்து தென் சென்னை மாவட்ட அதி.மு.க சார்பில் சைதாப் பேட்டை பனகல் மாளிகை அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பழ.கருப்பையா உரையாற்று கையில்-

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதுவரை 500 இற்கும் அதிகமான மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதனைத் தடுக்க முதல்வர் கருணாநிதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சதீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் தான் மீன் வளம் அதிகமாக உள்ளது. அதனால்தான் அங்கு தமிழக மீனவர்கள் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. கருணாநிதி முதல்வராக இருக்கும்போதுதான் கச்சதீவு தாரை வார்க்கப்பட்டது.

கச்சதீவை மீட்பதற்காக ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். அ.தி.மு.க ஆட்சிக்கு வந்தால் கச்சதீவு மீட்கப்படும் என்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கறுப்பு பணத்தை ஒப்படைப்பவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு பரிசீலனை

வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணம் பற்றிய விவரங்களை தாமாக முன் வந்து தெரிவிப்பவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிக்க மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை இந்தியாவுக்குக் கொண்டு வருவது குறித்து மதிய அரசுக்கு ஆலோசனை கூற 2 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நிருபர்களிடம் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது -

வெளிநாடுகளிலுள்ள கறுப்புப் பணத்தைக் கொண்டு வருவதற்குப் புதிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாமா என்று யோசிக்கப்பட்டது. அதில் ஒன்று பொது மன்னிப்பு திட்டம். பொது மன்னிப்பு அளிப்பது தொடர்பாக ஆலோசனை கூற ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த நிபுணர்கள் குழு எனக்கு (நிதி அமைச்சகத்துக்கு) ஆலோசனைகள் அளிக்கும். பொது மன்னிப்பு அளிப்பது தொடர்பான அறிக்கையை எவ் வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அவர்கள் அளிப்பார்கள்.

இன்னொரு திட்டம் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பண விவரங்களை கணக்கிட்டு, அவற்றை இந்தியாவுக்குக் கொண்டு வரவும், மேலும் கறுப்புப் பணம் வளராமல் தடுக்கவும் வழி வகைகளைத் தெரிவிக்கும் திட்டமாகும். இந்தத் திட்டம் பற்றி மந்திரிகள் குழு ஆலோசனை வழங்கும் என்றார்.

இந்தப் பொது மன்னிப்புத் திட்டம் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும் பட்ஜெட்டிலேயே அறிவிக்கப்படுமா? எனறு ஒரு நிருபர் கேட்டதற்கு, பிரணாப் முகர்ஜி பதில் அளிக்கவில்லை.

பொது மன்னிப்புத் திட்டம் என்பது, ஒரு கத்தியில் இரு கூர்மையான முனைகள் உள்ளது போன்ற சிக்கலான விஷயம். ஒரு பக்கம் இந்தத் திட்டம் கறுப்பு பணத்தை வெளிக் கொண்டு வர உதவும். இன்னொரு பக்கம் நியாயமாக, ஒழுங்காக வரி கட்டுபவர்கள் இடையே விமர்சனங்களை உருவாக்கும். இருந் தாலும் இந்தத் திட்டங்கள், யோசனைகள் செயறபடக் காலதாமதம் ஆகும். ஆனால், எவ்வளவு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக செயற்படுத்த முயற்சிப்போம் என்றார்.

# தேசிய விருது வாங்கவில்லை வருந்துகிறார் நடிகை குஷ்பு



(சென்னை)

தேசிய விருது வாங்க வில்லை என்பது எனக்குள்ளே என்னை வருத்தப்பட வைக்கிறது என, நடிகை குஷ்பு கூறினார்.

இந்திய தொழிற்கூட்டமைப்பின் கோவை கிளை சார்பில் ஆக்னியா என்ற பெயரில் மகளிர் நல கருத்தரங்கு கோவை அவினாசி சாலையில் உள்ள பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது.

முன்னதாக நடிகை குஷ்பு கருத்தரங்கில் குத்துவிளக் கேற்றி வைத்துப் பேசினர். அப்போது அவர் கூறியதாவது-

நாட்டின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு முக்கியம். பெண்கள் எதற்காகவும் தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்க் கூடாது. பெண்கள் எந்தத் துறையை சார்ந்து வேலை செய்தாலும் அதில் தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். சினிமா உலகில் காலடி வைத்து 25 ஆண்டுகளாகியும் தேசிய விருது வாங்க வில்லை என்பது எனக்குள்ளே என்னை வருத்தப்பட வைக்கிறது.

பெரிய குடும்பத்தில் பிறந்த பெண்ணாக இருந்தாலும் கட்டாயம் அனைவரும் தங்கள் செலவுகளுக்காகச் சம்பாதிக்க வேண்டும். அதிலுள்ள மனத் திருப்தி வேறு எதிலும் கிடையாது என்றார்.




# இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்ற கம்யூனிஸ்ட் தொண்டர்கள் 150 பேர் கைது



(சென்னை)


தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதை கண்டித்தும், இதில் மத்திய, மாநில அரசுகள் உடனே தலையிடக் கோரியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், நேற்று முன்தினம் ஆழ்வார் பேட்டையிலுள்ள, இலங்கைத் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. மார்க்சிஸ்ட் கட்சி மாநிலச் செயலர் ராமகிருஷ்ணன் தலைமையில் நடந்த, ஆர்ப்பாட்டத் தில் 150 இற்கும் மேற்பட்ட மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதில், தமிழக முதல்வர் கடிதம் எழுதுவதை விட்டு மீனவர்களைப் பாதுகாக்க ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும், மீனவர் படுகொலையை மத்திய அரசு வேடிக்கை பார்க்காதே போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்திக் கொண்டு இலங்கைத் தூதரகத்தை நோக்கி வந்தவர்களை பொலிஸார் அனுமதிக்காத தால், சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்ற, தென் சென்னை மாவட்டச் செயலர் பீம்ராவ், வட சென்னை மாவட்டச் செயலர் சண்முகம், மாநிலக் குழு உறுப்பினரும், எம்.எல்.ஏ., யுமான மகேந்திரன், தமிழ்நாடு மீன்பிடி தொழிற் சங்க கூட்டமைப்பின் பொதுச் செயலர் கருணாநிதி உட்பட 150க்கும் மேற் பட்டோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர், பின் மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

# தி.மு.க செய்து வரும் தவறுகளுக்கு மத்திய அரசு பாதுகாப்பளிக்கிறது

## கிருஷ்ணசாமி குற்றச்சாட்டு



(சிறிவில்லிபுத்தூர்)

தி.மு.க., அரசு செய்யும் தவறு களுக்கு, மத்திய அரசு பாது காவலனாக உள்ளது, என புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

சிறிவில்லிபுத்தூரில் அவர் கூறியதாவது -

வரும் சட்டசபைத் தேர்தலில் தி.மு.க.,வைத் தோற்கடிக்க அனைத்து முயற்சிகளையும் புதிய தமிழகம் செய்து வருகிறது. பெப்ரவரி 7 முதல், கிராமம் தோறும் பிரசாரம் செய்யவுள்ளேன்.

தி.மு.க.,வினர் கடந்த தேர்தலில் வாக்குறுதி கொடுத்த இரண்டு ஏக்கர் விவசாய நிலம், மூன்று சென்ட் இலவச வீட்டு மனை போன்ற திட்டங்கள் இன்றுவரை நிறை வேற்றப் படவில்லை. ஆனால் தற்போதும் புதிது புதிதாக பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து மீண்டும் ஆட்சிக்கு வரலாம் எனக் கனவு காண்கின்றனர்.

ஸ்பெக்ட்ரம் ஊழலை விசாரிக்க மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து தடைகளை ஏற்படுத்தி வருகின்றன. எதிர்க் கட்சிகள் லோக்சபா கூட்டுக் குழு விசாரணை கேட்டும் மத்தியரசு அதை மறுத்து வருகிறது. இதனால் ஊழலுக்குத் துணைபுரியும் காங்கிரஸ் கட்சியும் வரும் தேர்தலில் தோல்வியைச் சந்திக்கும்.

தி.மு.க, அரசு செய்யும் தவறுகளுக்கு மத்திய அரசு பாதுகாவலனாக இருந்து வருகிறது.

ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்தியும் விவசாயிகளை காப்பாற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் விளை நிலங்கள் ரியல் எஸ்டேட்டாக மாறி வருகிறது என புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஸ்ண சாமி தெரிவித்தார்.

# இதய அஞ்சலிகள்

| உதித்தார் | மறைந்தார் |
|---|---|
| 16 | 29 |
| 08 | 01 |
| 1981 | 2011 |



# இரத்தினசிங்கம் சதீஸ்
## (தோழர் சதீஸ்)

ஆற்றலும் அர்ப்பணிப்பும் உனது தனித்துவங்கள்
அயராத உழைப்பும் அடிப்படைத்தெளிவும்
தோழனே உனது அடையாளங்கள்.
நடந்த யுத்தமும், அடித்த சுனாமியும் வீசிய நிசாவும்
எங்கள் மக்களை நிர்க்கதியாக்கியபோது அவர்களுக்கு
நிவாரணப்பணி செய்ய இரவுபகல் பாராமல் உணவு, உறக்கம் மறந்து
நீ செய்த மக்கள் பணி
எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும்.
மக்களோடு மக்களுக்காக நிதம் நின்றாய்
என்பதுதான் தோழனே உனது பலமும் கூட,
தோழா! உனது பிரிவுச் செய்தி எங்கள் பயணத்தில் துயரமானதுதான்.
என்றபோதும் நமது மக்களுக்கு விமோசனம் தேடும் எமது வீரிய பயணம்
தொடரும், இந்த உறுதியே உனக்கான எமது அஞ்சலியாகட்டும்.

## தோழர்கள்

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.)**

## உயர்பாதுகாப்பு......

வலயங்கள் என்று கூறப்பட்டு அந்தப் பகுதிகள் மக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளன.

இது குறித்த தனது கவலையை அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் விஜேவிக்கிரமவிடம் தெரிவித்தனர். குறிப்பாக, திருகோணமலை மாவட்டம் சம்பூரில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஐ.நா. அதிகாரிகள் இந்தச் சந்திப்பின் போது தமது அதிக கரிசனையை வெளிப்படுத்தி உள்ளனர்.

சம்பூரில் மக்கள் இருப்பிடங்கள் உயர் பாதுகாப்பு வலயங்கள் ஆக்கப்பட்டதை அடுத்து அவர்களுக்கு மாற்று இடங்கள் அதிகாரிகளால் வழங்கப்பட்டன. ஆனால் பெரும்பாலான மக்கள் மாற்றிடங்களை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. தமது சொந்த இடங்களுக்குச் செல்லவே அவர்கள் விரும்புகிறார்கள் என்று ஐ.நா. அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## தேர்தல் வேட்புமனு.....

அளவில் போட்டியாளர்களுக்கான இலக்கங்கள் வழங்கப்படும் என இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள 301 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகளிடமிருந்து 1282 வேட்பு மனுக்களும், சுயேட்சைக் குழுக்களிடம் இருந்து 765 வேட்பு மனுக்களுமாக 2047 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றில் அரசியல் கட்சிகளின் 1134 வேட்பு மனுக்களும், சுயேட்சை குழுக்களின் 463 வேட்பு மனுக்களும் என 1597 வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அரசியல் கட்சிகளின் 148 வேட்பு மனுக்களும், சுயேட்சை குழுக்களின் 302 வேட்பு மனுக்களும் என மொத்தமாக 450 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் வேட்பாளர்களுக்கு போட்டியிடுவதற்கான விருப்பு எண் வழங்குவதற்காக பெயர்களை அகர வரிசைப்படுத்தும் நடவடிக்கைகள் துரித்தப்படுத்தப்பட்டுள்ளன.

301 உள்ளூராட்சி மன்றங்களில் 3931 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக மொத்தமாக 2047 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அடங்கலாக நாட்டில் 335 உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன.

25 மாவட்டங்களில் மொத்தமாக 335 உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்ற நிலையில் 267 சபைகளின் ஆட்சிகாலம் கடந்த 6ஆம் திகதி வியாழக்கிழமை முடிவுக்கு கொண்டு வரப்பட்டு கலைக்கப்பட்டன.

அத்துடன் ஏற்கனவே ஆட்சிகாலம் முடிவடைந்திருந்த நிலையில் தேர்தல் தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்பட்டு வந்த 34 சபைகளுக்கும் என மொத்தமாக 301 சபைகளுக்கே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடரும் துயரம்...

புலிகள் தோற்கடிக்கப்பட்ட தோடு இனங்க ளுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும் என இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

ஆயினும், புலிகள் தோற்க டிக்கப்பட்டு ஒரு வருடத்தற்கு மேலாகியும் தமிழ் மக்களின் துயரம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. தமிழ் மக்களின் பலர் போரின் போது காணாமல் போன தமது உறவுகளைத் தேடி இன்னமும் அலைந்து கொண்டி ருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் புனர்வாழ்வு முகாம்களிலிருந்து வீணாவும், அவருடைய பிள்ளைகளும் அண்மையில் தான் மீளக் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

போர் இடம்பெற்ற நாட்களில் சரணடைபவர்களை விசாரணை செய்துவிட்டு விடுதலை செய்வோம் என இலங்கை அரசாங்கம் கூறியதாலேயே தனது கணவரை இலங்கைப் படைத்தரப்பினரிடம் சரணடைய அனுமதித்ததாக வீணா தெரிவிக்கின்றார்.

தற்போது போர் முடிவடைந்து விட்டது. சரணடைபவர்கள் விசாரணையின் பின் விடுவிக்கப்படுவார்கள் என இலங்கை அரசாங்கம் கூறியது. அதனை நம்பித் தான் தனது கணவரை அவர்களிடம் சரணடைய அனுமதித்தேன். ஆனால் அவர் பின்னர் விடுதலை செய்யப்படவே இல்லை. தற்போது அவர் எங்கே இருக்கிறார் என்பது கூடத் தெரியாமல் இருக்கிறது என்றும் வீணா கூறுகின்றார்.

சுதந்திரமான நல்லாட்சியை ஏற்படுத்துவதாக அரசாங்கம் உறுதியளித்தமைக்கு ஏற்ப மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் நாட்டை வழிநடாத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அந்த நம்பிக்கை இப்போது இல்லை. போருக்குப் பின்னர் வெளியான போர்க்குற்றக் காட்சிகள் அடங்கிய காணொளி இலங்கை அரசாங்கத்தின் படைத்தரப்புக்கள் போரின் இறுதிக்கடத்தில் என்ன செய்தது என்பதை வெளிப்படுத்தியது.

போர் முடிவடைந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் கிழக்கு மாகாணத்தின் செங்கலடி நகரத்தில் எவ்வித மாற்றமும் இதுவரை ஏற்பட்டதாக இல்லை. இலங்கையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக அபிப்பிராயம் சொல்லவே அம் மக்கள் அஞ்சுகிறார்கள்.

தமது உறவுகளைக் கண்டுபிடிப்பதற்காக கொழும்பிலுள்ள சட்ட உதவி நிறுவனங்களை காணாமல் போனவர்களின் பெற்றோரும், உறவினர்களும் நாடி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒருவர் உயிருடன் இருக்கிறாரா அல்லது இல்லையா என்று தெரியாமல் தேடி அலைந்து கொண்டிருப்பது மோசமான வகையில துக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என மனித உரிமைகள் நிலையத்தைச் சேர்ந்த தஹிரா தெரிவிக்கின்றார்.

போர் முடிவடைந்தாலும் இலங்கையில் தமிழர்களின் வாழ்வு என்பது துன்பமும், துயரமும் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது என அல் ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரபப்பட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழருக்கான அதிகாரப் பகிர்வை...

நிலவிய போதிலும், அதன் செயற்பாடுகள், உறுப்பினர்களா கவுள்ள புலமையாளர்கள், இடைக்கால முன்மொழிவாளர்கள் போன்ற காரணங்களால் இவ்வுணர்வு அற்றுப் போய்விட்டது.

நாங்கள் பயங்கரவாதிகளை ஆயுதங்களினால் தோற்கடித்துள்ளோம். வீதி அபிவிருத்தி, கட்டிட நிர்மாணம் போன்ற அபிவிருத்தி நடவடிக்கையினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. ஜனநாயக ரீதியான செயற்றிட்டம் ஒன்றின் மூலமே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

நாட்டில் நிலவிய இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்திருந்தால் உயிரிழப்புக்களை தவிர்த்திருக்கலாம். நாட்டில் நடைபெற்று முடிந்த யுத்தத்தில் பல எமது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உயிரிழந்துள்ளனர்.

நாம் பிறப்பதற்கு முன்னரே இந்த நாட்டில் பிரச்சினைகள் இருந்தது. இந்த நாட்டின் சுதந்திரத்தை காங்கிரஸ் கொடியின் கீழ் பெற்றனர். அவ்வாறு பெற்ற சுதந்திரத்தை பகிர்வது தொடர் பிலேயே பிரச்சினைகள் உருவாகியது.

முதலாவது தேர்தலில் கொழும்பில் சேர்.பொன்.அருணாசலத்தை போட்டியிட சேனநாயக்கா அனுமதிக்கவில்லை. அதன் பின்னரே முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸ் கட்சி உருவாகியது.

இந்தியாவில் பாகிஸ்தான் அல்ஜின்னாவை தனிநாடாக கோரியதைப் போலவே தமிழர்களும் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்தனர். அத்துடன், அக் காலப்பகுதியில் ஜி.ஜி.பொன்னம்பலம் 50 இற்கும் அதிகமான அதிகாரத்தை பெற்றிருந்தார். அது தனிநாட்டுக் கோரிக்கைக்கு வலுச் சேர்த்திருந்தது.

1977இல் அதிகாரப் பகிர்வுக்கான இணக்கப்பாட்டு எட்டப்பட்டும், வடபகுதி இளைஞர்களின் தனிநாட்டுக் கோரிக்கையில் தீவிரமாக இருந்ததால் சகல பிரச்சினைகளையும் முடிவுக்கு கொண்டு வரும் சந்தர்ப்பம் நழுவிப் போனது.

எம் நாட்டில் மகாத்மா காந்தி உருவாகவில்லை. ஆயுதப் போராட்டம் உலகெங்கிலும் இல்லாத வகையில் முன்னெடுக்கப்பட்டது. உலகில் எங்கும் காணப்படாத வகையில் முப்படைப் போராளிகளைக் கொண்டதும், வேறெந்த அமைப்பிடமும் இல்லாத பல்குழல் பீரங்கிகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள் என்பன புலிகளிடம் காணப்பட்டது.

தமிழர்களுக்குப் பிரச்சினை உண்டென்பதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், பயங்கரவாதம் அதற்குத் தீர்வாகாது. இந்தப் பயங்கரவாதம் வடக்கு தமிழ் மக்களையும், தெற்கு சிங்கள மக்களையும் பாதிப்புள்ளாக்கியுள்ளது. பயங்கரவாதத்தால் நானும் இரு தடவைகள் தாக்கப்பட்டுள்ளேன். புலிகள் இயக்கத்தின் இறப்பர் முத்திரையாக செயற்பட்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சுதந்திரமாகச் செயற்படுகின்றது.

இன்று எவரும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. தமிழர்களுக்கான பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு எரிக் செல்ஹெய்மும் மத்தியஸ்தம் வகிக்கவுள்ளார். 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தயாராவுள்ள போதிலும், அது சர்ச்சையான விடயம்.

காணி மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் காணப்படுகின்றன. சிங்கள பொலிஸ் ஒருவர் தமிழ் நபர் ஒருவரை கைது செய்தாலோ, தண்டணை வழங்கினாலோ பிரச்சினை உருவெடுக்கின்றது. மாறாக தமிழ் பொலிஸ் ஒருவர் அவ்வாறு செயற்பட்டால் பிரச்சினைகள் வருவதில்லை.

நாட்டில் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். தமிழ் மக்கள் மத்தியிலும், ஒவ்வொரு சமூக மட்டத்திலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. தற்போது அதனைத் தீர்ப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் ஒன்று உருவாகியுள்ளது. இதனைத் தீர்ப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து முன்வரவேண்டும்.

நாடாளுமன்றம் பிரச்சினை களை தீர்ப்பதற்கு ஒரு சிறந்த இடமாக இருப்பினும், பிரதிநிதி குழுவிலும் அங்கம் வகிப்பவர்கள் நாடாளுமன்றத்தில் உள்ளவர்களே. அதனால், அரசியல் பிரமுகர்கள், மக்கள் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் மற்றும் ஆணைக் குழுக்கள் போன்றோர் உள்ளடக்கிய அமைப்பின் முடிவுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளித்த அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

## யாழ்.வடமராட்சி கிழக்குப்...

ருக்கிறது. காலை 7.30 மணிக்கும் 7.45 மணிக்கும் இடையில் மோட்டார் சைக்கிளில் இவர் இவ்வீதியில் பயணித்துக் கொண்டிருந்த சமயம் இடம்பெற்ற சம்பவத்தினால் இவர் தலையில் பலத்த காயமடைந்திருக்கிறார். இந்தக் காயம் காரணமாக அதீத குருதிப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுவே இவரது மரணத்துக்கு காரணமாக அமைந்துவிட்டது.

இவரது சடலம் வீதியில் இருப்பதை அறிந்த பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சிவில் அதிகாரிகள் ஸ்தலத்துக்கு அவசரமாக விரைந்தனர். பருத்தித்துறை பதில் நீதிவான் பொ.குமாரசாமியும் சம்பவ இடத்திற்கு விரைந்தார். அம்பனில் இடம்பெறவிருந்த வைபவம் ஒன்றுக்காக அங்கு வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இச்சம்பவத்தைக் கேள்வியுற்று அங்கிருந்து உடனடியாகவே ஸ்தலத்துக்கு விரைந்தார். அங்கு அவரின் பணிப்புரைக்கு அமைய பொலிஸாரும், தடயவியல் நிபுணர்களும் களநிலை விசாரணைகளை உடனடியாகவே நடத்தினர். இவர்களின் விசாரணைகளின் அடிப்படையில் இவரது மரணத்துக்குக் காரணமாக சம்பவத்தினைத் துல்லியமாகக் கண்டுபிடிக்க உடனடியாக முடியாமல் இருந்தது.

சம்பவம் இடம்பெற்ற சூழல்,அவரது உடலில் காணப்பட்ட காயங்களின் தன்மை மற்றும் அப்பகுதியில் காணப்பட்ட புறச் சூழல் மற்றும் அங்கிருந்து சேக ரிக்கப்பட்ட சான்றுப் பொருட்கள், தடயங்கள் ஆகியவற்றை வைத்துக் கொண்டு நடைபெற்ற சம்பவத்தை உருவகப்படுத்தவும், உண்மையைக் கண்டறியவும் தடயவியல் நிபுணர்களும், பொலிஸாரும் முயற்சி செய்தனர். இம் முயற்சி பல மணி நேரம் வரை நீடித்தது.

இறுதியில் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்யும்படி பருத்தித்துறை பதில் நீதிவான் பொ.குமாரசுவாமி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து நண்பகல் அளவில அவரது சடலம் பொலிஸாரால் அங்கிருந்து மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ்.போதனா மருத்துவமனையின் சட்ட வைத்தியப் பிரிவினரால் பிரேத பரிசோதனை நடாத்தப்பட்டது. இப்பிரேத பரிசோதனை அறிக்கையின்படி தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஏற்பட்ட அபரிமிதமான இரத்தப்பெருக்கு காரணமாக இந்த மரணம் சம்ப வித்ததாக அறிக்கை விடப்பட்டிருக்கிறது.

எனினும், அவரது தலையில் ஏற்பட்ட பாரிய காயத்துக்கான காரணம் குறித்து இது வரை தீர்க்கமான முடிவுக்கு வர அதிகாரிகளால் முடியாமல் உள்ளது. இந்த விடயத்தில் குற்றத்தடுப்புப் பொலிஸாரும், தடயவியல் நிபுணர்களும் தமக்கு கிடைத்த சான்றுகளையும், தடயப் பொருட்களையும் வைத்துக் கொண்டு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். இதன்பெறுபேறு கிடைக்க மேலும் சில நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கும்.


அதேவேளை, நேற்றுக்காலை இடம்பெற்ற இச் சம்பவம் குறித்துப் பல்வேறு விதமான மாறுபட்ட செய்திகள் வெளிவந்துகொர்ண்டிருக்கின்றன. வீதி விபத்தில் சிக்கி மரணமானதாகவும், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து மரணமடைந்ததாகவும் எந்தவகையிலும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் பல இலத்திரனியல் ஊடகங்களில் நேற்றுக்காலை முதல் வெளியாகிக்கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று மாலை....

பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் (வேலாயுதம் மகா வித்தியாலத்துக்கு முன்பாக) பி.ப 2.30 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# உறக்கம் மறந்து உழைத்தவன் இன்று உறங்கிப் போனான்...





## ஜனாதிபதிக்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு



இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதி ராக அமெரிக் காவில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வன்னி இறுதிக்கட்டப் போரின் போது சர்வதேச போர் நியமங்களுக்கு எதிராக இலங்கை படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கைகளுக்காக 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டஈடு கோரி அமெரிக்காவின் வோஷிங்டன் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு புலிகளுடனான இறுதிக்கட்டப் போர் உட்பட இலங்கைப் படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட மூன்று தாக்குதல் நடவடிக்கைகளின் போது தமது உறவினர்களை இழந்த அமெரிக்காவில் வாழும் மூவரின் சார்பில் இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில்அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபரும், பிரபல வழக்கறிஞர்களில் ஒருவருமான புரூஸ் பெய்ன் இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

சித்திரவதைகள், போர் நியமங்கள் மற்றும் சட்டத்திற்கு எதிரான படுகொலைகள் தொடர்பாக வெளிநாட்டவர்களுக்கு எதிராக அமெரிக்காவில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கும் 1991ஆம் ஆண்டின் சட்டம் ஒன்றின் கீழேயே இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்கறிஞர் புரூஸ் பெய்ன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒளிந்து கொண்டிருப்பதன் மூலம் சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளால் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புச் சட்டத்தின் நீதியின் கரங்களில் இருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தப்பமுடியாது என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இவ் வழக்கிற்கு பொறுப்புக் கூறுவது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து பதில் கிடைக்காதுவிட்டால், அவர் நீதிமன்றத்தில் சமூகம் அளிக்காமலேயே தீர்ப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என இவ் வழக்கைத் தாக்கல் செய்த பின்னர் புரூஸ் பெய்ன் கூறியுள்ளார்.

அதேவேளை, ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக இலங்கைஅரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்ற புலிகளின் ஆதரவாளர்கள் பணத்துக்காக இத்தகைய வழக்குகளை தாக்கல் செய்வதாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் பந்துல ஜயசேகர, இத்தகைய செயல்களுக்கு பதிலளிப்பதற்கு தமக்கு நேரமில்லை எனவும் கூறியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்தார். இவர் அமெரிக்காவில் சுமார் 10 நாட்கள் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

1991ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளால் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் சித்திரவதைகள், துன்புறுத்தல்கள் மற்றும் படுகொலைகளை மேற்கொண்ட வெளிநாட்டவர்கள் அமெரிக்காவுக்கு வருகின்ற தருணத்தில் அவர்களைக் கைது செய்வதற்கான அதிகாரம் அந்நாட்டு நீதிமன்றங்களுக்கு உண்டு.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வருடம் நவம்பர் மாதம் இலண்டனுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போதும், அவரைக் கைது செய்யும்படி வலியுறுத்தி இடம்பெற்ற தொடர்ச்சியான போராட்டங்களால் அவர் திடீரென நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு சோடனை செய்யப்பட்ட வதந்தி

### பந்துல ஜயசேகர கூறுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவிற்கு எதிராக தமிழ் செயற்பாட்டாளர்கள் சிலர் ஐக்கிய அமெரிக்க ராஜ்ஜியத் தின் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கானது வெறுமனே பொய்யான சோடனை செய்யப்பட்ட வதந்தியென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜயசேகர, அரசாங்கத் தகவல் திணைக்கள இணையத்தளத்திற்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலிகளின் நிதியில் செயற்படும் சிலரே இவ்வாறன நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலேயே இவ்வாறான செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெறுமனே இவ்வாறான வதந்திகளுக்கு பதில் வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு நேரம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்தார். இதன் போது, அமெக்க தமிழ் அமைப்பு ஒன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்கு ஒன்றை தொடுத்துள்ளதாக மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணி புரூஸ் பெயின் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கொல்லப்பட்ட தமிழ் மக்களின் உறவினர்கள், நட்டஈடாக 30 மில்லியன் அமெரிக்க டொலர் களை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை, புலம் பெயர்ந் தவர்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய விடுத்துள்ளார்.

புலிகளின் ஆதரவாள்களுக்கு இலங்கை ஒரு போதும் அடிப்பணியாது என அவர், அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், புலிகளின் ஆதரவாளர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

## அதிகரிக்கும் தற்கொலைகள்; தடுத்து நிறுத்தத் திட்டம்



(கொழும்பு)

இலங்கையில் தற்கொலைகளைத் தடுப்பதற்கு விசேட அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு தேவையேற்பட்டுள்ளதாக உயர்கல்வியமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இந்தநிலையில், இலங்கையில் வருடாந்தம் 60 ஆயிரம் பேர் வரை தற்கொலை செய்து கொள்வதாகப் புள்ளிவிபரங்கள் சான்று பகர்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனைக் கட்டுப்படுத்துவ தற்கான அவசியத்தை உயர் கல்வியமைச்சர் இதன்போது வலியு றுத்தியுள்ளார்.

## ஆனந்தசங்கரியின் காலை.....

களுக்கு போட்டியிட கூட் டமைப்பால் தாக்கல் செய்ய ப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

இவ்வேட்பு மனுக்களில் சமா தான நீதிவானின் கையொப்பங் கள் இடம் பெற்று இருக்கவில்லை.

கரைச்சி பிரதேச சபைக்கான வேட்பு மனு மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த மூன்று பிரதேசசபை களுக்கும் வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில் பூநகரி, பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேச சபைகளுக்கு ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுத லைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகின் றது.

கடந்த காலங்களில் வீ. ஆன ந்தசங்கரியை அவமதிக்கும் வித த்தில் தமிழ் தேசியக் கூட்டமை ப்பு பல சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டது.

ஆயினும், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடக் கூட்ட மைப்பின் வேட்பாளர்களுக்கு இடம்கொடுத்து அவர் தனது பெருந்தன்மையை வெளிப்படுத்தி உள்ளார்.

## பருத்தித்துறைச் சம்பவம்.....

ஊடகத் தகவல்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாக உள்ளன.

சம்பவ இடத்தின் புறச்சூழலும் அங்கு காணப்பட்ட தடயங்களும், சான்றுப் பொருட்களும் தரும் தகவல்கள் ஆகியவை கூறும் செய்திஎன்ன என்பதையும் பிரேத பரிசோதனை அறிக்கையும் இறந்தவரின் உடலில் காணப்படும் காயங்களின் தன்மையும் அவற்றின் மூலம் கண்டறியக்கூடிய உண்மைகள் என்ன என்பது குறித்தும் விரிவானதும் ஆழமானதுமான விசாரணைகள் தாமதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தி ருக்கிறார்.

நேற்றைய தினம் சம்பவ இட த்துக்கு உடனடியாகவே விரைந்த அமைச் ஸ்தலத்தில் நின்ற வண்ணமே மேற் சம்பவம் தொடர்பான அனைத் விசாரணைகளுக்கும் உத்தரவிட் டா இறுதியாகப் பிரேத பரிசோதனை இடம்பெற்ற யாழ். போதனா மருத்துவமனைக்கும் அமைச்சர் நேரடியாக விஜயம் செய்து பிரேத பரிசோதனை அறிக்கையையும் பரிசீலனை செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
SHALOM வழங்கும் நற்செய்தி...!
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/411)
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும்
மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற
செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
தொலைபேசி : 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.